543

உ
சிவமயம்.

# அத்துவித வாக்கியத் தெளிவுரை

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துத்
திராவிட மாபாடிய கர்த்தராகிய
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்
அருளிச் செய்தது

*

ஷை ஆதீனத்து 20-வது குரு மஹா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி


ஷை ஆதீனத்து வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்
பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

உரிமை பதிவு

விரோதி — சித்திரை — ஆயிலியநாள்

1949

543



திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

உ
சிவமயம்.

# —: முன்னுரை :—

—●—

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ,
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பாநு வாகிக்,
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்,
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

'முடியுடை வேந்தர் மூவருக்குப் பின் நமது தாய் மொழியாகிய தமிழையும், சமய வரசாகிய சைவ சமயத்தையும் பேணி வளர்த்து வந்த பெருமை திருவாவடுதுறை ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் ஆதீனத்திற்குரிய தனிப்பெருமையென்பதை அறிஞருலகம் நன்கு அறியும். வடமொழியிலே பாடியங்கள் பல இருக்கின்றன. பாணினீயம் என்னும் இலக்கணத்துக்குப் பதஞ்சலி மாபாடியமும், மீமாம்சைக்குச் சபர பாடியமும், பிரம சூத்திரத்துக்கு நீலகண்ட பாடியம், சங்கர பாடியம், இராமாநுச பாடியம், ஆனந்த தீர்த்த பாடியம் முதலிய பல பாடியங்களும், வடமொழிச் சிவஞான போதத்துக்குச் சிவாக்கிர பாடியமும் இருக்கின்றன. ஆனால், நமது செந்தமிழ் மொழியிலோ அவ்வகையான பாடியம் ஒன்றுமில்லை. நமது ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் ஆதீனத்து ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான போதத்திற்கு மெய்கண்ட தேவநாயனார் அருளிச்செய்த வார்த்திகப் பொழிப்பின்மேல் சிவஞான பாடியம் அருளிச்செய்து தமிழன்னைக்கு நெடுங்காலமாகப் பாடிய மில்லாதிருந்த குறையை நீக்கியருளினார்கள்.

இஃதொன்றே திருவாவடுதுறை யாதீனத்தின் பெருமையைக் குன்றிலிட்ட தீபம்போல விளக்குவதாகும். ஸ்ரீ மாதவச்

சிவஞான சுவாமிகள் காவியம், இலக்கணம், தருக்கம் முதலிய பல துறைகளிலும் புகுந்து அரிய நூல்கள் பல அருளிச் செய்திருக்கின்றார்கள். இதனை நன் குணர்ந்த ஸ்ரீமான் பாண்டித் துரைத்தேவரவர்கள் 'நூல், கற்பா னசைபிற் சிவஞான தேவன் கலையுணர்க' என்று அறிவுறுத்தியிருக்கின்றனர்.

சுவாமிகளின் மாணக்கர் பன்னிருவருட் சிறந்தவரும் கவி ராக்ஷஸ ரெனப் புகழ் பெற்றவருமான ஸ்ரீ கச்சியப்ப முனிவர் சங்க நூல்களிலும் பஞ்ச காவியங்களிலும் காணப்படும் சொற் பொரு ளழகுகளையும் இலக்கண வமைதிகளையும் ஒரு சேரத் திரட்டித் தணிகைப்புராணம் அருளிச்செய்திருக்கின்றனர். அம் முனிவரர் தமிழறிவை மாணக்கர்கள் படி முறையாற் பெறும் பொருட்டுப் பூவாளூர்ப் புராணம், விநாயக புராணம், பேரூர்ப் புராணம், திருவானைக்காப் புராணம், காஞ்சிப் புரா ணத்து இரண்டாங் காண்டம் என்பன வற்றையும் இயற்றி யருளினர். அன்றியும், திருத்தணிகை யாற்றுப்படை முதலிய ஏழு பிரபந்தங்களையும் அவர்கள் அருளிச்செய்திருக்கிறார்கள்.

சுவாமிகளின் மற்றோர் மாணவராகிய தொட்டிக்கலை மதுரகவி—ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் கலைசைச் சிலேடை வெண்பா, துறைசைக் கோவை முதலிய பல பிரபந்தங்களை இயற்றியருளினர். இவை யனைத்தும் பழங்காலச் செய்திகள்.

இவ்வாதீனத்து 15-வது ஆசிரியர் ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் காலத்தும் 16-வது ஆசிரியர் ஸ்ரீ சுப்பிர மணிய தேசிக சுவாமிகள் காலத்தும் இவ்வாதீனத்து மஹா வித்துவானாக இருந்த திரிசிரபுரம் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்கள் 23 புராணங்களும், பல பிரபந்தங்களும் இயற்றியும் பல நன் மாணக்கர்களுக்குக் கல்வி கற்பித்தும் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர். சென்னை மஹாமஹோ

பாத்தியாய டாக்டர் தாக்ஷிணாத்திய கலாநிதி பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் பிள்ளையவர்களின் மாணாக்க ரென்றால் பிள்ளையவர்களின் பெருமையை வேறென் சொல்வது. பிள்ளையவர்கள் காலத்துக்குப்பின் 16-வது ஆசிரியர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் காலத்தில் யாழ்ப்பாணத்து வடகோவை ஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் இந்த ஆதீனத்து வித்துவசிகாமணியாக இருந்து சிதம்பர சபாநாதபுராணம், சதுர்வேத தாற்பரிய சங்கிரக மொழி பெயர்ப்பு, சிவகர்ணாமிர்த மொழி பெயர்ப்பு, திராவிடப் பிரகாசிகை முதலிய பல நூல்களியற்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர். பின்பு, சேற்றூர் ஸ்ரீ. மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களும், ஸ்ரீ சு. பொன்னோதுவா மூர்த்திகளும் இவ்வாதீனத்து வித்துவானாக இருந்து பலர்க்குத் தமிழ் கற்பித்து வந்தார்கள். பிரமஸ்ரீ டாக்டர் ஐயரவர்களும் சிற்சில காலம் திருவாவடுதுறையிலிருந்து மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பித்து வந்தார்கள்.

இப்பொழுது இவ்வாதீனத்து 20-வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து சிவ க்ஷேத்திரபரிபாலனம், குருக்ஷேத்திர பரிபாலனம், செந்தமிழ்ப் பரிபாலனம், சித்தாந்த சைவபரிபாலனம் முதலியனசெய்து கொண்டு பெரும்புகழுடன் வீற்றிருந்தருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் விக்கிரமசிங்கபுரம்—ஸ்ரீ சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்களை ஆதீன வித்துவானாக இருத்திப் பழமைபோலவே தமிழையும் சைவத்தையும் பேணிவந்தார்கள். பல நூல்களைப் பரிசோதித்து அச்சிடுவித்து இலவசமாக வழங்குமாறும் செய்வித்தார்கள். பின்பு, ஒன்றுக்கும் பற்றாத எளியேனையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கருணையுடன் இவ்வாதீன கைங்கரியத்தில் ஈடுபடுத்தியருளி நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டுபகரிக்குமாறு கட்டளையிட்டருளினார்கள். அந்த முறையிலே

அத்துவித வாக்கியத் தெளிவுரை என்ற இச்சிறு நூலும் 27-வது வெளியீடாக இன்று வெளிவருகிறது. இதனை இயற்றியருளியவர்கள் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள். இவ் அத்துவித வாக்கியத் தெளிவுரை முன்பு ஸ்ரீ சேற்றூர். மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களால் ஜய-ஹூத்தில் அச்சிடப்பெற்றது. இது இப்போது கிடைப்பது அரிது. ஆயினும், திராவிட மாபாடியத்திலே பல இடங்களில் காணப்படும் செய்திகளை ஒருசேரத்திரட்டி யுபகரிக்கப்பட்ட இந்நூல் சித்தாந்த சைவச் செல்வர்கட்குப் பெரிதும் பயன் தருவதாயுள்ளது. ஆகலின், இந்நூல் வரைந்த சுவடியொன்று திருவாவடுதுறைக் கல்விக் களஞ்சியத்திலே காணப்பட்டது. அதனையும் அச்சிட்ட பிரதியையும் வைத்து ஒப்புநோக்கப் பல திருத்தங்கள் கிடைத்தன. அத் திருத்தங்களுடன் ஸ்ரீ சுவாமிகள் திரு நக்ஷத்திரமாகிய ஆயிலியநாளில் இதனை வழங்குமாறு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் கருணை கூர்ந்தருளியது.

காலத்தின் நிலைக்கேற்பச் சிவ தருமங்களைச் செவ்வனே நடாத்துவிப்பதுடன் அமையாது உலக தருமங்களிலும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வழங்கி வழங்கிப் புகழையும் உடன்பெருக்கிவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 30—4—49ல் காந்திஜீ ஞாபகார்த்த நிதிக்காக ரூ. 35,000/- இரண்டாயிர ரூபா பெறுமானமுள்ள வெள்ளிப் பேழையில் வைத்து ராஜன்பாபு அவர்களுக்கு வழங்கியமை உலகறிந்ததேயாம்.

இதிற் காணப்படும் பிழைகளைப் பொறுக்கும்படி அறிஞர்களை வேண்டிக் கொள்கிறேன்.

விரோதி-ஆண்டு<br>சித்திரைத் திங்கள்<br>ஆயிலியநாள்.

**த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,**<br>**ஆதீன வித்துவான்.**

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அத்துவித வாக்கியத் தெளிவுரை.

அத்துவித மென்னுஞ் சொல்லின் நகரம் இன்மை அன்மை மறுதலையென்னு மூன்றனு ளொன்று பயக்கும். அவற்றுள், இன்மைப் பொருள்கொண்ட மாயாவாதி, இரண்டின்மை ஒரு பொருளன்றி இரண்டு முதலியவா யெண்ணப்படும் பொருள்களில்லாமையால் அத்துவித மென்னுஞ் சொற்குப் பொரு ளொன்றென்பதே யாமென வும்; ஒரு பொருளாயினுங் குணகுணியென வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவல மொன்ருதலின்மையால் அத்து வித மென்ப துபசாரச் சொல்லாய் முடியுமாகலால், தன் னின் வேரு யொரு பொருளுமின்றித் தானுங் குண முடைப் பொருளென விசேடிக்கப் படுதலின்றி நிர்வி சேடமாய் நிற்கும் பரப்பிரமப் பொருளென்பது அத்து வித மென்னுஞ் சொற்குப் பொருளாகக் கோடலின் அவர்கள் கேவலாத்துவிதிகளெனவும் வழங்கப்படுவர்.

இராமாநுசர், சிவாத்துவித சைவர் முதலோரும் அவ் வாறே யின்மைப் பொருள்பற்றி யொன்றே யெனப் பொருள்கொண்டு சத்தி சங்கற்ப முதலிய குணங்கள்பரப் பிரமப் பொருளுக்குளவென்று உபநிடதங்கள் கூறுதலா னும், அவை செய்கை யென்றற்கோரியை பின்மையானும், பசுபாச முண்மையு முபநிடதங்களி னேதுதலானும் அவை களோடு முரணிக் கேவலாத்துவிதமெனக் கோடல் பொருந்தாமையின், தன்னே டியையுடைய பசு பாசங்க

ளானுந் தன் குணங்களாய சத்தி சங்கற்ப முதலிய வாற் றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம். இரண்டில்லை ஒன்றென்பதே அத்துவித மென்னுஞ் சொற் குப் பொருளென விசிட்டாத்துவிதங் கோடலா லவர்கள் விசிட்டாத்துவிதிகளென வழங்கப்படுவர்.

பேதவாதிகள், மறுதலைப் பொருள்பற்றி இரண் டன் மறுதலையாகிய ஒன்றெனப் பொருள்கொண்டு, அங் ஙனங் கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவது முண்டென்றற் கிழுக்கின்மையின் அத்து வித மென்பதுந் துவித மென்னும் பொருளைப் பயக்கு மென்று போவர்.

அவரெல்லாம் அச்சொற்கு ஒன்றே யெனப்பொருள் கொண்டு தத்த மதங்களோடு முரணுமைப் பொருட்டுக் கேவலம், விசிட்டம், மறுதலை யென்னு மடைகூட்டி யிடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள் மாயாவாதி கூறுங் கேவலமும், பேதவாதி கூறு மறுதலையுஞ் சுருதி யோடு முரணுதலி னீண்டைக் கேலாவாம். ஏனையோர் கூறும் விசிட்டம் பொருந்து மாயினும், அத்துவிதத்துக் குப் பொருளொன் றெனக் கோடல் பொருந்தாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின், ஒன்றெனவே விளங்கக் கூறலமையும். அவ்வாறின்றி, அத்துவிதமென வுய்த்துணர வைத்தோத வேண்டாமையானும், ஒன்றெ னப் பொருள் கொள்ளின், மாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதமென்றது பற்றி ஆண்டொரு பயன்படாமையானு மென்க. மற் றென்னையோ அத்துவித மென்னுஞ் சொற்குப் பொரு ளெனிற் சித்தாந்த சைவருரைக்குமாறு காட்டுதும். அது நீ யாகின்று யெனவும், அது நானாகின்றே னெனவும், அது இதுவாகின்ற தெனவு மூவிடம் பற்றி நிகழுந் தத்துவ மசி முதலிய மாவாக்கியங்களைக் கேட்டவழி, அதுவென்ப

தொருபொருள் நீ யென்பதொரு பொருளாகலின் ஒரு பொருள் மற்றொரு பொருளாமாறு யாங்ஙன மென்னு மைய நீக்குதற் கெழுந்த தாகலின் அது இதுவாதற்கேது வான அவ்விரண்டு முளதாகிய சம்பந்த விசேட முணர்த்துதலே அத்துவித மென்னுஞ் சொற்குப் பொரு ளென்றுணர்ந்து கொள்க.

அற்றேல், அத்துவித மென்னுஞ் சொல்லாற் பெறப் படுஞ் சம்பந்தம் ஐக்கியமோ, தாதான்மியமோ, சமவா யமோ, சையோகமோ வெனக் கடாவினார்க்கு ஆற்று நீருங் கடனீருந் தம்மிற் சேர்ந்தாற் போலவுங், குடா காயமு மகாகாயமுந் தம்மிற் சேர்ந்தாற் போலவுமா மெனில், அங்ஙனஞ் சேர்ந்தவழி யொரு பொருளே யாகலின் ஒன்றெனவே யமையும், அத்துவிதமென வுய்த் துணரவைத்தோதவேண்டா. அன்றியு மொன்றுயவழி அதுவதுவாய் நின்றறிதலாகிய ஆன்ம விலக்கண முத்திக் காலத்திவில்லை யெனப்பட்டு வழுவாமாகலின் அது பொருந்தாமையானும்; குண குணிகட்குத் தம்மி னுள தாகிய சம்பந்தம் போலுந் தாதான்மிய மெனில், ஆன்மா முதல்வனைப் போலக் குணிப் பொருளாய் நிற்ப தன்றி முதல்வனுக்குக் குணமாகாமையால் அவ்வாறியை தல் கூடாமையானும்; தாதான்மியத்தின் வேறாய் நையா யிகர் கூறுஞ் சமவாய மென்பதொன்றின்மையானும், விர லும் விரலுஞ்சேர்ந்து நின்றாற்போலச் சையோக மெனில், அவ்வியாவ்விய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருட்குக் கூடாமையானும், யாதானுமோ ரியைபு பற்றிக் கூறப்படுஞ் சொரூப மெனில், அது மாவாக் கியப்பொருளை வலியுறுத்தற் கெழுந்த அத்துவிதச் சொற்குப் பொருளாகாமையானுஞ்; சொரூப சம்பந்த மாத்திரையிற் சிவானந்தத்தை யனுபவித்தல் கூடாமை யானும்; இவற்றின் வேறு யின்னதென்றறிய வாராத

அநிர்வசனமெனில், அங்ஙனங்கூறுதன் மாயாவாதி கூற்ருய் வழுவா மாகலானும் அவையெல்லா மீண்டைக் கேலாமையின், வேறு விடுக்குமாறென்னை யெனிற் கூறுதும். ஒரு பொருளே அவயவ அவயவி களாயாதல், குணகுணிகளாயாதல், வேற்றுமைப்பட் டிரண்டாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இரு பொருளே அதுவதுவா யொற்றுமைப்பட்டு ஒன்ருய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமுமெனத் தாதான்மிய சம்பந்த மிருவகைப்படும். அவற்றுண் முன்னையது தாதான்மிய மென்றும், பின்னையது அத்துவித மென்றும் வழங்கப்படும். அத்துவித மென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறிய வாற்ருன் வேறு பொருடரு மாறின்றி அன்மைப் பொருள் பற்றி யிரண்டன்றென வேற்றுமைப் படாமை நிற்றலேயாமென்க.

இதுவே ஆசிரியர் கருத்தென்பது " அத்துவித மென்னுஞ் சொல்லே யந்நிய நாத்தியை யுணர்த்து மாயிட்டு" என்றதனுனும், புடை நூலாசிரியர் "பிறிவரு மத்துவித மாகுஞ் சிறப்பினதாய்" என்றுடம்பொடு புணர்த்தோதியதனுனு மறிக.

இவ் வத்துவிதம் அபேத சம்பந்தமாகிய ஐக்கியமுமன்றிப், பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப், பேத சம்பந்தமாகிய சையோகமு மன்றிக் கலப்பும் உடனுதலும், வேருதலு மாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி அம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுமாகலான், அவ்வத்துவிதத்திற் கொவ்வோரிடங்களின் அலை கடலிற் சென்றடங்குமாறு போலெனவும், வானத்தில் வானும், மணத்தின் மணமும் போலெனவும் அபேத வுவமையும்: பண்ணையு மோசையும் போலப் பழமதுவு மெண்ணுஞ் சுவையும்போ லெனவும், நீருமிரதமும் போலாங் காணரனு ருளெனவும் பேதாபேத

வுவமையும்; இரும்பைக் காந்தம் வலித்தாற் போலியைந் தென்பேத வுவமையும்; ஒருபுடை யொப்புமைபற்றி யெடுத்துக்காட்டுப வாகலின், இங்ஙன முரணுவபோல வேறு வேறு பெயரெடுத்துக் காட்டுதல் பற்றி மலையற்க.

இம்மூன்றியையுந் தன்கட்டோன்ற இவற்றிற்கு வேருய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படு முவமையாவது ஆன்ம போதமுங் கண்ணொளியுந் தம்முளத்துவிதமாய் நிற்றலா மென்க.

"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுளத்தைக் கண்டு காட்டலின்"
(சிவஞான போதம்)

எனவும்,

"......காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்
கேயுமுயிர் காட்டிக்கண் டிடுமா போல
வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ......"
(சிவஞான சித்தியார்)

என்வும்,

"அறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகும்".
(சிவப்பிர)

எனவு மூன்று நூலாசிரியருஞ் சித்தாந்த முடிவுணர்த்தும் வழி யிதனையே யெடுத்துக் காட்டிய வாறறிக.

இவ்வத்துவித மேனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலம், விசிட்டம், மறுதலை யென்றாதலொன்றான் விசேடிக்கப் பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவித மென் வழங்கப்படும்.

ஈண்டுச் சுத்தமென்றது யாதொன்றுனும் விசேடிக்கப்படாது நிற்றலே. அது விசிட்டசத்தை, சுத்த சத்தையெனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானு மறிக.

ஏனையோர் கூறும் அத்துவிதங் கேவல முதலியவற்றுன் விசேடிக்கப்படாத வழி அவர்கூறும் பொருடருதற் கேலாமையின், அவை யெல்லாஞ் சுத்தாத்துவித மாகாமையுங் காண்க.

இங்ஙன மொருபொரு ளிருதன்மையான் வியாபகமும் வியாப்பியமுமாய் வேறுபட்டு நிற்குந் தாதான்மியம் போல வியாபகமும் வியாப்பியமுமான இருபொருளொரு தன்மை யானொற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மிய சம்பந்த மொன்றுண்டெனவும், அதுவே அன்மைப் பொருள் பற்றி அத்துவித மென்னுஞ் சொல்லா னுணர்த்தப்பட்டதெனவும் அறியமாட்டாதார் தத்தமக்கு வேண்டியவாரு யிவ்வுண்மை யுணராதது மன்றி, விஞ்ஞான தீக்கையா லுடல் பொருள்களோடொப்பச் சற்குரவன் கையிற்ருனஞ் செய்தளித்த பொருளென்றறியு மறிவு சலியாமைப் பொருட்டு நாணாளுஞ் சிவபூசையிற் செபகன்மங்களோடொப்பச் "சிவோ தாதா" என்னு மந்திரமோதி ஆன்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூநீரோடு தானஞ்செய்தளித்துத்தான் சுதந்திரனே சிவனுடைமையல்லனெனப் பிணங்கிப் பரம சற்பாத்திரத்திற் ருனஞ்செய்த பொருளை அபகரிக்க நினைக்கு நினைவுடையாரோடு பேசினு முய்தியில்லதோர் கொடிய பாவமென்றொழிக. தன்னைத் தானஞ் செய்தலாவது தான் சிவனுக்குப் பரதந்திர னென்றறிந்து அவனருளல்லா, தொன்றையுஞ் செய்யானாகி நிற்றலே யாமென்றுணர்தல்.

அற்றேல், மலவாசனை நீங்குதற் பொருட்டுத் தன்னைத் தானஞ் செய்ததாகப் பாவித்தன் மாத்திரையே யாகலின், அதுபற்றி யிழுக்கென்னை யெனின்? அங்ஙன மாக,

அப்பாவனை போலியோ, உண்மையோ யெனக் கடாவினார்க்கு, உண்மையெனின் பரதந்திரராதற் கிழுக்கில்லை; போலியெனின், பசித்தவ னுண்டான் போல வெத்துணைப் பாவகஞ் செய்யினும் பசி நீங்குதல் கண்டில மாகலின் அதுபோல, போலிப் பாவனையான் மலவாசனை நீங்குமாறின்மையின் அது வீண் டொழிலாய் முடியும். இன்னும், பாவனை போலி யென்பார்க்குப் பாவனை வழியவாச் செய்யு மந்திர கிரியைகளும் போலியாய் முடியும். முடியவே, பாவனை முதன் மூன்றனும் அவர் செய்யுஞ் சிவ தீக்கையுஞ் சிவபூசையுஞ் சிவத்தியான முதலிய வெல்லா வாசாரங்களும் அங்ஙனம் போலியாச் செய்வது தமக்கா யினும் பிறர்க்காயினும் பயன்படுமா றின்மையின் மாணுக்கரை வஞ்சித்துத் தம் முடம்பை யோம்புதற் பொருட்டுச் செய்யு மாரவார மாத்திரை போலுமென் றொழிக.

அற்றேல், கருடபாவனை செய்வோன் கருடனுதல் கண்டிலம், அப் பாவனையால் விடந் தீர்தல் கண்டன மாகலிற் போலிப் பாவனையும் பயன்படுமென்பது பெறப் படுமா லெனின், அறியாது கூறினுய். மாந்திரிகன் றன்னுடம்பைக் கருடனுகப் பாவிப்பானல்லன்; மற்றென் னையோவெனின், கருடனுக்கதி தெய்வமாக நிற்கு மந்திர மூர்த்தியாகத் தன் னுன்மாவைப் பாவிப்பன்; அங்ஙனம் பாவித்த வழிச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல் புடைய வான்மா ஆண்டம் மந்திர ரூபியாய் நிற்றற் கிழுக்கின்மையின், அதுபற்றி யாசங்கையின்மையுணர்க.

இன்னும் பாவனைகளு முபாசனைகளுங் கற்பித்துக் கொண்டு செய்யும் போலியென்றன் மூாயாவாதி கூறுங் கூற்ருதலின் அது சைவ சித்தாந்தத்திற் கேலாமை யறிக.

அற்றேல், ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய னென்றற்கும் அதனானே தன்னாற் கணிக் கப்படு மந்திர ரூபியாய் நிற்ப னென்றற்கும் விலங்கு புள்ளுக்கு மதி தெய்வமாய் நின் றதிட்டிக்கு மந்திரமுண் டென்றற்கும் பிரமாண முண்டாயினன்றே அது பற்றிக் கருட பாவனை முதலாயின வுண்மைப் பாவனையென்று கொள்ளப்படும், ஆதலினிவற்றிற்குப் பிரமாணமென்னை யெனின் : சர்வஞானோத்தர முதலிய ஆகமங்களே பிரமாணமென வறிக.

அஃதெங்ஙன மெனிற் காட்டுதும் : சர்வஞானோத் தரத்திற் பசுவும், பாசமும், அதிகாரஞ் செய்திருப்ப தாகிய பதியும், அதிகாரத்தினொழிந்து தன்னியல்பினிற் பதாகிய சிவமுமெனப் பதார்த்த நான்கென் றெடுத்துக் கொண்டு, அவற்றிற்குத் தனித்தனியிலக்கணமு முணர்த்திப், பின் னதுகேட்ட ஆறுமுகக் கடவுளுக்கு அங்ஙன மப்பிரமேயமா யொன்ருே டுவமிக்கப் படாத தாய், அதி சூக்கும மாய், வியாபகமாய்த் தன்னியல் பினிற்குஞ் சிவத்தை யறியுயா றெங்ஙன மென்னு மாசங்கை நிகழாமைப் பொருட்டுச் 'சிவப்பொருளத்தன் மைத்தாயினும் அதனை யறிதற் குபாயங் கூறுகின்ரும், அவ்வுபாயம் வாதிகளெவராயினு மறியப்பட்ட தன்ருய்க் குருபரம்பரையி னறியப் படுவது. ஒருவருக்கும் யாங் கூறினே மல்லேம். அதனை நீ கேட்பாயாக' வென் றதன்பெருமையை யெடுத்துக் காட்டி, அநாதி முத்தனாய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளும் அத் தன்மையனாகிய சிவனே நானெனச் சிவோகம் பாவனை செய்யுமாறும் ;

அவ்வா றன்றித் துவித பாவனை செய்தாற் படுமிழுக்கும்; விளங்க விரித்துணர்த்தித், துவித பாவனையைக் கை விட்டுச் சிவோகமென் அத்துவித பாவனை செய்வோன் ஏகதேசமாய் நின்றறிவதாகிய சிற்றறிவி னீங்கி, முழு தும் வியாபகமாய் நின்றறிவ தாகிய முற்றுணர்வு விளங்கிச், சிவனை யறிந்து தான் சிவனே யாவனென்னச் சிவனை யறிதற் குபாயங் கூறிப், பின் னதுகேட்ட ஆறு முகக்கடவுளுக்கு, மேலுத்தேசங் கூறும் வழியும், இலக் கணங் கூறும் வழியுஞ் சிவனு மான்மாவு மிருபொரு ளென வைத்தோதுதலிற் சிவனின் வேருகிய ஆன்மா, சிவோகமெனப் பாவிக்கும் அத்துவித பாவனையாற் சிவனே தானுக ஐக்கிய மாமா றெங்ஙனமென் ருசங்கை நிகழாமைப் பொருட்டு ஆன்மா தன்னியல்பே யறியாது பசுத்துவத்தோடு கூடிய வழிப் பசுவாய் நின்ருன், அது போலத் தன்னையறிந்து சிவத்துவத்தோடு கூடிய வழிச் சிவமாய் நிற்பதற் கையமில்லை. ஆதலாற் றன்னையுந் தலைவனையும் அபர பர பேதத்தானுந், தூல சூக்கும பேதத்தானு மெப்பொழுதும் பயின்றறிதல் வேண்டு மென்ருேதினீர்! அற்றேல், ஆன்மாவி னியல்பு தனித்து நில்லாது பசுத்துவத்தோடு கூடிப் பசுவெனவுஞ், சிவத்துவத்தோடு கூடிச் சிவமெனவும் பல தன்மைப் பட்டு நிற்குமா றென்னை யென்று மீளவு மையுருமைப் பொருட்டு, 'அதவா' வென்றெடுத்துக் கொண்டு தெளிவு பிறவாது மீள மீள மயங்குதற் கேதுவாகிய வார்த்தைகளை விகற்பித் திங்ஙனம் பலவாகச் சொல்வ தென்னை யெனக் கூறியொழித் தெல்லாச் சங்கைகளு நீக்கித் தெளிவு பெறுதற் கேதுவுந் தொகுத் தொரு வார்த்தையி னுணர்த்துவான் புகுந்து 'சர்வோ தரும' மென் றருளிச் செய்தார்.

இதன் பொருள்:— 'ஆன்மா அங்ஙன மிருதன்மைப் படுமாறென்னையென் றையுருது எல்லாப் பொருளின்

றன்மைகளு மான்மாவுக் குளவாம். அஃதெங்ஙன மெனின்? ஆன்மா வெதனை யானெனப் பற்றினுன் அதனதன் சுபாவமே தன் சுபாவமாந் தன்மை யுடைமை யான், அதுவதுவாயே நிற்பனென் றிங்ஙன மான்மாவை யறியுமாறு தொகுத்துக் கூறினுங் கண்டு கொள்க' வென்பதாம்.

இங்ஙனந் தொகுத் துணர்த்தி, இன்னு மிவ்வாற்றியு மான்ம ஞானத்தின் பெருமையும், அதனுற் பெறும் பேறும், அதனை யறிதற் குபாயமும், அறிந்தானது பெருமையும் விரித்துக் கூறி, இதற்கு மேற் சொல்லற் பாலது சிறிதுமில்லை; ஆகலான், மனோவிகற்பங்களை யொழித் திங்ஙன மதனுண்மை யறிந் துபாயங்களைச் செய்வோன் இங்கே சீவன் முத்தனய் அகம்புற மெங்கும் வியாபித்துத், தத்தரும தருமியாய்த் தத்தருமி யெனப் பட்ட முற்றுணர்தன் முதலிய வெண் குணங்களை யுடையவனுய், இங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருட்டிப் படுந்தன்மை முதலியவின்றிச் சிவ சமமாவன். இத்தன்மை யுடையவனுக்குத் தவம், செபம், தியானம், பூசை முதலியன வொன்றும் வேண்டா, சத்தியஞ் சத்திய முக்காலுஞ் சத்தியம். இதற்குமே லறிதற் பாலன் வொரு நூலினு மில்லை யென வலியுறுத்திப் பின்னு மான்மாவெல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்குமாற்றைப் பூதான்மா முத லறுவகைப் படுத்தி விரித்து நின்று கூறுதுங் கேட்பாயாக வென் றெடுத்துக் கொண்டு, பூத பரிணும மாகிய வுடம்பினியல்புகளும், ஆன்மா அவ் வுடம்பைப் பற்றிய வழிப் பூதான்மா வென நிற்குமாறும் அகத்தின் கண்ணவாகிய வாக்குகளி னியல்பும், ஆன்மா அவற்றைப் பற்றி யந்தரான்மா வென நிற்குமாறும், சூக்கும பூத முதலிய தத்துவங்களி னியல்பும், ஆன்மா சுத்த தத்துவங்களைப் பற்றிய வழித் தத்துவான்மா

வென நிற்குமாறும், தத்துவங்க ளுள்ளும் ஆன்மா வெவ்வேறு தத்துவங்களைப் பற்றியவழி அவ்வத் தத்துவமயமாயே நிற்பனென்பதும், ஆன்மாப் போத்துருத்துவமெய்திப் புருடதத்துவனென நிற்கு மியல்பும், அங்ஙனம் புருடதத்துவ மயமாய் நின்று பிரகிருதி குணங்களைப் பற்றி யின்ப துன்பங்களை நுகரும் வழிச் சீவனென நிற்கு மென்பதும், சுரர் நரர் விலங்கு புள் தாவர மெல்லாவற்றிற்கு மதி தெய்வங்க ளுள வெனவுந், தாவர சங்கமங்களுண் மந்திரங்களா னதிட்டிக்கப் படாத வுயிர்களில்லை யெனவும், மந்திரங்களை யுச்சரிக்கு முறைமை யிவ்வாறெனவும், இவ்வாறு மந்திரங்களி னியல்பும், அவ்வம் மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மாப் படிகம் போல அவ்வம் மந்திரமயமே யாகி மந்திரான்மா வென நிற்குமாறும், அதனின் வேறாகிய விவ் வைவகைப் பெயரு நீங்கிய வழி மேற்கூறிய அத்துவித பாவனையாற் பரமான்மா வென நிற்றல் சித்தென்று சாதிப் பொதுமை பற்றி யியற்கை யாதலுந் தெரித்துணர்த்தி, இங்ஙனமாகலான், அத்துவித பாவனையுடையோன் ஞானக் கண்ணினாற் சிவனை ஆன்மாவிற் கண்டு முழுதும் வியாபகமாய் நின்றறிவ தாகிய முற்றுணர்வுடையவனாய் அவ்வப் பொருளியல் பெல்லா மறிந்து, மலவாசனை நீங்கிக் கேவலமாய் நின்று, முடிவு காணில்லாப் பேரின்பத்தைப் பெறுவானென முடிந்தது முடித்துக் காட்டி இங்ஙனம் ஸ்ரீகண்டருத்திரக் கடவுள் ஆறுமுகக் கடவுளுக்கு ஞான பாகஞ் செவியறிவுறுத் தருளினார். இன்னுமிதனை யிங்குரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக் கொள்க.

இவ்வாகமத்து ளித்தனை வலி யுறுத்திச் சிவனோ டொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆன்மஞான மோனமொன்றே அப்பிரமேயமா,யொன்றோ

டுவமிக்கப்படாது நின்ற அச்சிவனை யறிதற் குபாய மென்றும்; அங்ஙனம் பாவிக்கவே, அச்சிவனோ டொற் றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவா னென்பதும்; அசுத்தப் பொருளோ டொற்றுமைப்பட்டு நிற்குமா றெங்ஙன மென்னு மைய நீக்குதற்குத் தொகுத் தொரு வார்த்தையாற் கூறுது மென்றெடுத்துக் கொண்டு ஆன்மா எதனை யெதனை யானெனச் சார்ந்தான் அதன தின் சுபாவமே தன் சுபாவமாய் அது வதுவாய் நிற்ப னென்று கூறி, இங்ஙனமேவலாற் சிவனோடொற்று மைப்பட்டு நிற்புழிச் சிவன் குணங்களாகிய வெண் குணங்களுந் தன்றன்மையாக் கொண்டு சிவனேயாய் நிற்பன்; இதுவே சிவத்தைப் பெறுதலென்றும், இதற்கு மேலாய பல னொருநூலானு மில்லை முக்காலுஞ் சத்திய மென வலியுறுத்தியும், ஆன்மா வெல்லாவற்றினு மது வதுவாய் நிற்கு மாற்றை இன்னும் விளங்கக் கூறுது மென் றெடுத்துக்கொண்டு பூதான்மா, தத்துவான்மா, மந்திரான்மா, அந்தரான்மா, சீவான்மா, பரமான்மா வென்றறு வகைப்படுத்து அவ்வவற்றிற் கூடிய வழி அவ்வப் பெயர்பெற் றதுவதுவாய் நிற்பனென ஆண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தை யுவமை கூறியும், இங்ஙன மேனை யாகமங்கள் போலப்பொருள் கவர்ச்சிப் படுதற் கிடங்கொடாத வண்ணம் ஆறுமுகக் கடவுண் மாட்டுவைத்த கருணை மிகுதியான் அங்கை நெல்லிக்கனிபோல ஆன்மாவினியல்பு விளங்கவுணர்த்திப், பலகாலும் வலியுறுத்து, யெல்லா வாகமங்களினுஞ் சிறந்த தென்பது தோன்றச் 'சர்வ ஞானோத்தர' மென்ப் பெயரு மிட்டருளிச் செய்த **ஸ்ரீ கண்டருத்திரக் கடவுளின்** திருவுளக் குறிப்பிங்ஙன மென்க.

இனி, யுடல் பொருளாவி மூன்றும் ஞான தீக்கை யின் முதல்வனுக் கெனத் தானஞ்செய் தளித்தலான்

முன் செயற்கையாற் றன்னுடைமையாய் நின்ற மூன் றுந் தானஞ்செய்த பின்னர்த் தனக்கின்றிச் சிவனுக் குடைமை யாயவாறு பெற்றும். பெறவே, ஆண்டுப் பொருளென்ற துடம்புபோல வொற்றுமை யுடைத் தாய்த் தன்னு னுகரக்கிடந்த வுடல்வினையே யன்றி முன்பே தன்னாற் றுறக்கப்பட்டிழிந்ததரப் பொருளன் றென்பது தாமே போதருதலானும், அவ்வாறின்றி ஆண்டுப் பொருளென்ற தெல்லாவற்றிற்கும் பொது வெனக் கொள்ளினும் உடல் வினையுமவற்று ளடங்குத லானும், அங்ஙன முதல்வனுக் கென்றீந்த வுடல்வினையை மீளவுந் தானுகரக் கருதுவோன் அவ்வாறு தானஞ் செய்தளித்த வான்மாவை மீளவுஞ் சுதந்திரனாகக் கருது வோன் சிவ சமவாதியோ டொப்பவனு மாகலின் முதல் வனுக்கென்றளித்த பொருளைத் தானுகரக் கருதுதல் பெரியதோ ரிழுக்காத லறிக.

---

இன்னுந், தன்னுடம்பே தனக்கின்றி முதல்வனுக் குடைமையாக ஈந்தவழி அவ்வுடம் பிடமாக வரும் வினைப்பயனைத் தானுகருதற்கோ ரியல் பின்மையு மறிக.

இன்னுந், தனக்குத்தானே சுதந்திரமின்றிச் சிவனுக் குடைமையாய வழித்தான் மற்றொன்றுட னுகருமாறு யாண்டைய தென்க.

தன்னு லளிக்கப்பட்ட பொருண் மூன்று முதல்வ னேன்று கொண்டா னென்பது,

"அன்றே யென்ற னாவியு முடலு
முடைமையெல் லாமுங்
குன்றே யனையா யென்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ"

எனவும்,

"உடலிடங் கொண்டா யினியுன்னை"

எனவும்,

"என்றவுடற்கனம்" எனவும்,

"என்றவுடற் பழவினைகள்" எனவும்,

"என்ற வவனை" எனவும்,

"என்று கொண்டா யென்னை" எனவும்,

"நாமொழிந்து சிவமாவ" தெனவு மோதியவா றென்றறிக.

---

அத்துவித வாக்கியத்தெளிவுரை முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

*

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் திருவடிவாழ்க!

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க!

---

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.